முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்.பொள்ளாச்சி

நாள்: 25.02.2026. அ.வ.எண். 389/2020 , வா.சா.1. ஜெயசீலன், த/பெ. ஆறுமுகம்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) தாவா சொத்துக்கள் ஆதியில் செல்லமுத்து கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்று தான் எனது வழக்குரையிலும், பிரமாண பத்திரிக்கையிலும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு ஆதரவாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். அது என்ன ஆவணம் என்று தற்போது சொல்லமுடியுமா என்றால் நான் ராமலிங்கத்திடம் இருந்து கிரயம் பெற்ற ஆவணத்திலேயே மேற்கண்ட குறிப்பு உள்ளது. ஆதியில் தாவா சொத்துக்கள் சின்னம்மாள் என்பவரின் பெயரில் உள்ளது என்றும் அது தெரிந்தும் அதை மறைத்து நான் செல்லமுத்துகவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்று கூறியுள்ளேன் என்றால் சின்னம்மாள், செல்லமுத்து கவுண்டரிடம் இருந்து தான் எனக்கு கிரயம் கொடுத்த ராமலிங்கம் வாங்கியுள்ளார்.

2) சின்னம்மாள் விற்ற சொத்துக்கள் போக மீதமுள்ள சொத்துக்கள் குறித்து பதிவு செய்யப்பட்ட உயில் ஏற்படுத்தியுள்ளார் என்றால் உயில் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. வா சா ஆ 11 பாகப்பத்திரத்தில் எந்த மூல ஆவணத்தின் அடிப்படையில் சொத்துக்கள் எனக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் ராமலிங்கத்திடம் இருந்து வாங்கியதற்கு பின்னிட்டு தான் மேற்படி வா சா ஆ 11 எனக்கும் எனது அப்பா மற்றும் சகோதரர்களுக்குள் பாகம் ஏற்பட்டது.

3) சி அட்டவணை சொத்து எனக்கு எப்படி வந்தது என்று எந்த ஒரு மூல ஆவணமும் தாக்கல் செய்யாமல் சட்டத்திற்கு புறம்பாக ஒரு பாகப்பத்திரம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. எனக்கு ஒதுக்கப்பட்ட சி

ஒப்பம்/−(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

அட்டவணை சொத்து குறித்து தான் இந்த தாவா என்றால் சரிதான். தாவா சொத்து விவரங்களும் சி அட்டவணை சொத்து விவரங்களும் வெவ்வேறானவை என்றால் சரியல்ல. சி அட்டவணை சொத்தில் எனக்கு எவ்வளவு பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் 1 ஏக்கர் 6 செண்ட் ஆகும்.

4) சி அட்டவணை சொத்தில் 1 ஏக்கர் என்று தான் குறிப்பிட்டுள்ளது என்றும் வழக்கிற்காக 1 ஏக்கர் 6 செண்ட் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ராமலிங்கம் செட்டியாரிடமிருந்து கிரயம் பெற்றதாக சொல்லப்படும் ஆவணத்தின் எண் தெரியுமா என்றால் 1041/1977 ஆகும். மேற்படி ஆவணம் என்முன் காட்டப்படுவதா என்றால் சரிதான். **மேற்படி ஆவணம் – சான்றிட்ட நகல் பி வா சா ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி பி வா சா ஆ 1ல் சொத்து விவரம் கோயமுத்தூர் ஜில்லா, பொள்ளாச்சி தாலுகா , கோட்டூர் கிராமம், புலத்தில் க.ச.எண். 724 நெ. பு. ஏ. 9.67 ல் மேற்படிக்கு ரங்கசாமி கவுண்டர் வகையறா பங்கு பூமிக்கும் மேற்கு, மனோன்மணியம்மாள் பங்குபூமிக்கும் ஆக இவைகளுக்கும் வடக்கு மனோன்மணியம்மாள் பூமிக்கும் கிழக்கு, க.ச.737 நம்பர். கிழமேல் இட்டேரிக்கு தெற்கு , இதன்மத்தியில் வடபுறம் கிழமேல் லிங்ஸ் 317, தென்புறம் கிழமேல் லிங்ஸ் 317, கிழபுறம் தென்வடல் 320 லிங்ஸ், மேபுறம் தென்வடல் 320 லிங்ஸ் இதன் மத்தியில் புஞ்சை ஏக்கர் 1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5) ஆனால் நான் தாக்கல் செய்துள்ள தாவா சொத்துவிவரத்தில் க.ச.எண். 724/6 நம்பர் காலைக்கும்கிழமேல் ரோட்டிற்கும் வடக்கு கிழமேல் ரோட்டிற்கும் தெற்கு பி எஸ் என் எல் அலுவலகத்திற்கும் குடியிருப்பு பகுதிக்கும் கிழக்கு,

ஒப்பம்/–(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

க.ச.எண். 724/3 , 724/4 காலைகளுக்கும் தென் வடல் ரோட்டிற்கும் மேற்கு இதன் மத்தியில் புஞ்சை ஏக்கர் 1.6 1/2 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் நான் தாவாவில் குறிப்பிட்டுள்ள சொத்தும், சி அட்டவணை சொத்தும் வெவ்வேறானவை என்றால் சரியல்ல.

6) வா சா ஆ 11 ஆவணத்தில் எனக்கு ஒதுக்கப்பட்ட சி அட்டவணை சொத்துவிவரம் ரங்கசாமி கவுண்டர் வகையறா பங்கு பூமிக்கும், இந்த இடத்திற்குவரும் கிழமேல் தடத்திற்கும் பொன் வேலை ஆசாரி வீட்டிற்கும் ஆகிய இவைகளுக்கும் மேற்கு, 2ம் லக்கமிட்டவர் பி 1 செட்யூல் இடத்திற்கும் வடக்கு. டெலிபோன் அலுவலக மதில் சுவருக்கும், இடத்திற்கும் கிழக்கு, க.ச.எண். 737 அரியாபுரம் வாக்கால் தார் ரோட்டிற்கும் தெற்கு, இதன் மத்தியில் 1 ஏக்கர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு கோட்டுர் மலையாண்டிபட்டிணத்தில் உள்ள சாரங்கபாணி தியேட்டர் தெரியுமா என்றால் தெரியாது.

7) ராமலிங்கம் செட்டியார் யாரிடமிருந்து கிரயம் பெற்றார் என்ற ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும் , ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் தான் மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்யாமலேயே தாக்கல் செய்துள்ளதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்ன என்றால் ராமலிங்கம் செட்டியார் செல்லமுத்து கவுண்டர் மற்றும் சின்னம்மாளிடம் இருந்து கிரயம் பெற்ற ஆவணம் ஆகும். **மேற்படி ஆவணத்தின் நகல் பி வா சா ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ( சான்றிட்ட நகல் பின்னிட்டு தாக்கல் செய்வதாக வழக்கறிஞர் கூறியதின் பேரில் மேற்படி ஆவணம் குறியீடு

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

செய்யப்பட்டுள்ளது).

8) மேற்படி பி வா சா ஆ 2 ன் படி சின்னம்மாளும் , செல்லமுத்து கவுண்டரும் விவசாய நிலங்களை தான் ராமலிங்கம் செட்டியாருக்கு கிரயம் கொடுத்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தற்போது சரியாக ஞாபகமில்லை. அதே போல் நாங்கள் ராமலிங்கம் செட்டியாரிடமிருந்து கிரயம் பெற்ற ஆவணத்தில் அவர் விவசாயம் செய்த நிலங்களை கிரயம் கொடுத்ததாக தான் உள்ளது என்றால் அப்போது என்ன எழுதியிருந்தது என்று எனக்கு ஞாபகமில்லை. மேற்படி முழு விவரங்களும் தெரிந்திருந்தும் எனக்கு சி அட்டவணை சொத்தில் தியேட்டர் என்று தான் குறிப்பிட்டு ஒதுக்கப்பட்டுள்ளதை மறைப்பதற்காக தற்போது ஞாபகமில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல.

9) எனது வழக்குரையிலும், பிரமாண பத்திரிக்கையிலும் 1 ஏக்கர் என்று குறிப்பிட்டு விட்டு ஆனால் தாவா சொத்து விவரத்தில் 1.6 1/2 ஏக்கர் என்று குறிப்பிட்டு இருப்பதால் மேற்படி 2 சொத்துக்களும் வெவ்வேறானவை என்றால் சரியல்ல. அதே போல் எங்களுக்குள் பாகம் செய்து கொண்ட பாகப்பத்திரத்தில் எவ்வித மூல ஆவணங்களின் அடிப்படையும் இன்றி க.ச.724 காலையில் 2 ஏக்கருக்கு மேல் பூமி இருப்பதாக பாகம் செய்து கொண்டோம் என்றால் தாசில்தார் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் தான் பாகம் செய்து கொண்டோம். மேற்படி தாசில்தார் பிறப்பித்த பிழை திருத்த உத்தரவை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேலும் சார் ஆட்சியரின் உத்தரவையும் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு நான் சொல்வது பொய் என்றும் அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல,.

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

10) எனது பிரமாண வாக்குமூலத்தில் 3 வது பாராவில் செல்லமுத்து கவுண்டருக்கும் சின்னம்மாளுக்கும் தாவா சொத்துக்களையும் அருகில் உள்ள சொத்துக்களையும் விற்றதற்கு பிறகு அவர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று கூறியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த ஆவணங்கள் எனக்கு சம்மந்தமில்லாதவை ஆகும். எனது பிரமாண வாக்குமூலத்தில் 4 வது பாராவில் 1
முதல் 3 பிரதிவாதிகள் மோசடியாக பல ஆவணங்கள் தயார் செய்துள்ளார்கள் என்று கூறியுள்ளகுற்றச்சாட்டிற்கு முதல் தகவல் அறிக்கையோ, வேறு ஆவணங்களோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் த ாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

11) எனக்கு 2 ஆண் மக்கள் நவீன், சிவபிரகாஷ் உள்ளனர். மேற்படி என் பிள்ளைகள் மீதும் என் மீதும் மோசடியாக ஆவணங்கள் தயார் செய்ததாக என்று முதல் தகவல் அறிக்கை ஆனைமலை, கோட்டூர் காவல் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. செல்லமுத்து கவுண்டருக்கு முதல் மனைவி பாக்கியலட்சுமி என்று வழக்குரையில் கூறியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. 1 முதல் 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்த Rejection of Plaint ல் எதிர் உரை தாக்கல் செய்ததில் செல்லமுத்து கவுண்டருக்கு முதல் மனைவி மயிலாத்தாள் என்று சொல்லியுள்ள நிலையில் அதை நிரூபணம் செய்ய ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு நான் சொல்வது பொய் என்றும்அது போன்ற ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

ஒப்பம்/–(R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

12) செல்லமுத்து கவுண்டரின் முதல் மனைவி வள்ளிநாயகம் தான் அதை மறைப்பதற்காகத்தான் மயிலாத்தாள், பாக்கியலட்சுமி என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா வழக்கின் அதே சங்கதிகள் குறித்து நான் மற்றும் பலர் கோவை முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண். 1/2019 தாக்கல் செய்து மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பிற்கு எதிராக எவ்வித மேல்முறையீடும் இது நாள் வரை செய்யவில்லை என்றால் சரிதான். அ.வ.எண். 785/2008, 360/2012, 1/2019 ஆகிய வழக்குகளில் வள்ளிநாயகம் மற்றும் இந்த தாவாவின் பிரதிவாதிகள் தான் செல்லமுத்துகவுண்டர், மனோன்மணியத்தின் வாரிசுகள் என்று உறுதிசெய்யப்பட்ட நிலையில் மீண்டும்மீண்டும்அதே சங்கதி குறித்து வழக்குகள் தாக்கல் செய்வதே என்னுடைய வழக்கமாக உள்ளது என்றால் சரியல்ல.

13) எனக்கோ , செல்லமுத்து கவுண்டர், மனோன்மணியத்திற்கோ ரத்த சம்மந்தம் எதுவும் கிடையாது என்றால் சரிதான். அந்த நிலையில் 3 ம் மனிதரின் பிறப்பை கொச்சைப்படுத்துவதற்கு எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் நான் எவ்வித கொச்சையும் படுத்தவில்லை. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தான் அ.வ.எண். 1/2019 லும் தாக்கல் செய்து மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். உலகத்தில் ஒரு நபருக்கு ஒரு பெயர்தான் இருக்கும் அது மற்றவருக்கு இருக்காது என்ற கற்பனையில் சட்டத்திற்கு புறம்பாக இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

14) எனது பிரமாண வாக்குமூலத்தில் 6 வது பத்தியில் 6 வது உட்பிரிவில் வள்ளிநாயகத்திற்கு 1948 வரையிலும் திருமணமே நடைபெறவில்லை என்பதை குறிப்பிட்டு காட்டுவதற்காக தான் அவரது தகப்பனார் பெயரை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. இன்னாரின் மகள் என்பதை காண்பிப்பதற்காகத்தான் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன். மேற்படி அதே பத்தியில் வள்ளிநாயகம் பழனியப்ப பிள்ளையின் மகள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அது தட்டச்சு பிழையாகும். பொதுவாக திருமணம் ஆனதற்கு பின்பு பெண் பெயருக்கு அடுத்து கணவரின் பெயர் தான் இருக்கும் என்றால் சரிதான்.

15) 1948 ம்ஆண்டு ஒரு வள்ளிநாயகத்திற்கு திருமணம் ஆகாததால் தான் அவரது தகப்பனார் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதுஎன்றால் சரியல்ல, 1 முதல் 3 பிரதிவாதிகளின் தாயான வள்ளிநாயகத்திற்கு 1944 ம் ஆண்டிலேயே குழந்தைகள் இருந்தது என்றால் சரியல்ல, அதிலிருந்தே பிரதிவாதிகளின் தாய் வேறு, நான் சொல்லும் வள்ளிநாயகம் வேறு என்றால் சரியல்ல.

ஒப்பம்/–(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி